**செய்தி வெளியீடு எண்: 10/02/2021** **நாள்: 20.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

**விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (20.02.2021) கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பொது மக்களுக்கும் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, மெட்ரோ இரயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதைப் பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ‘ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை’ அமைப்புடன் இணைந்து இன்று (20.02.2021) மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) மெல்லிசை கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**